## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.
## அசல் வழக்கு எண். 82/2025

2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21–ம் நாள் வியாழக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 21.08.2025 | தகப்பனார் பெயர்: | திருப்பதி |
| பெயர்: | திருஞான அமுதன் (PW–1 Chief ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | சீர்காழி டவுன் | சமயம்: | |
| தொழில்: | | வயது : | 60/2025 |

**<u>முதல் விசாரணை : 21.08.2025</u>**

நான் இவ்வழக்கின் வாதியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். என்னுடைய சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. 20.09.2017 தேதியிட்ட அண்ணாமலை என்பவரின் இறப்புச் சான்றிதழ் அசல் **வா.சா.ஆ.1** ஆகவும்

2. 16.11.2024 தேதியிட்ட பரிமளா என்பவரின் இறப்புச் சான்றிதழ் அசல் **வா.சா.ஆ.2** ஆகவும்

3. 27.01.2025 தேதியிட்ட 1ம் எதிர்வாதி வழங்கிய மேலெழுத்து கடிதம் அசல் **வா.சா.ஆ.3** ஆகவும்

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.